IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.
O.S. No.81/2021
Deposition of Witness for PW1.

Name : திரு. செந்தில்குமார்
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.01.2026.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதிவங்கியில் கிளை மேலாளராக பணியில் இருக்கிறேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். 21.08.2009 தேதியிட்ட 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் எங்கள் வங்கியில் கொடுத்த கடன் விண்ணம் வா.சா.ஆ–1, 04.09.2009 தேதியிட்ட 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் ஒப்பந்த பத்திரம் வா.சா.ஆ–2, 04.09.2009 தேதியிட்ட 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் வங்கிக்கு எழுதிக்கொடுத்த முன்மொழிதல் படிவம் வா.சா.ஆ–3, 04.09.2009 தேதியிட்ட 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் அனுமதி கடிதம் வா.சா.ஆ–4, 02.09.2013 தேதியிட்ட 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் வங்கியின் பெயருக்கு கையொப்பம் செய்துகொடுத்த மெய்யூட்டு கடிதம் வா.சா.ஆ.5, 01.09.2015 தேதியிட்ட 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் வங்கியின் பெயருக்கு கையொப்பம் செய்துகொடுத்த மெய்யூட்டு கடிதம் வா.சா.ஆ.6, 28.08.2018 தேதியிட்ட 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் வங்கியின் பெயருக்கு கையொப்பம் செய்துகொடுத்த மெய்யூட்டு கடிதம் வா.சா.ஆ.7, 27.03.2021 தேதியிட்ட 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அதிகார நகல் வா.சா.ஆ 8, 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் அதனை பெற்றுக்கொண்டதற்காக அஞ்சல் ஒப்புகை அட்டைகள் எண்ணம் 2 வா.சா.ஆ–9 ன் வரிசை. 1 மற்றும் 2ம் பிரதிவாதிகளின் கடன் கணக்கு

விபர பட்டியல் வா.சா.ஆ 10., எங்களுடைய வங்கியின் பெயர் மாற்றத்திற்கான கடிதம் வா.சா.ஆ–11. பிராதுபடி தீர்ப்பாக வேண்டும் என வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.